உறுப்பினர் செயலர் திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.அ.விஜயன்., பி.இ.,

ந.க.எண்.4816/2018/டிஎல்பிர .

நாள்.25.03.2019.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள்- மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017 - திண்டுக்கல் மாவட்டம் / கிழக்கு வட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், அடியனூத்து ஊராட்சி மற்றும் கிராமம் - நிலஅளவு எண்- 863/4A - ல் அமையும் 21780 சதுரடி அல்லது 2023.43 ச.மீ அல்லது 0 ஏக்கர் 50 செண்ட் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள நிலையிலுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1) அரசாணை (நிலை) எண்-78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்-04.05.2017.
2) அரசாணை (நிலை) எண்-172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்-13.10.2017.
3) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்-13193/2017/எல்ஏ2, நாள்-30.10.2017, 31.10.2017, 07.11.2017 17.11.2017 மற்றும் 20.12.2017.
4) மனுதாரர் திருமதி R.S.செல்வி, திண்டுக்கல் விண்ணப்பம் நாள்-20.11.2018 மற்றும் 17.12.2018.
( பதிவுஎண்-DTCP/L/0712261/2017 நாள்-15.11.2018 மற்றும் பதிவுஎண்-DTCP/L/0713695/2017 நாள்-15.11.2018. )

-----

**உத்தரவு :**

பார்வை(1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும், பார்வை(3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை(4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம் / கிழக்கு வட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், அடியனூத்து ஊராட்சி மற்றும் கிராமம் - நிலஅளவு எண்.863/4A - ல் அமையும் 21780 சதுரடி அல்லுத 2023.43 ச.மீ அல்லது 0 ஏக்கர் 50 செண்ட் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள நிலையிலுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ (R) / தி.உ.தி.கு எண்- 34/2019** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 21780 சதுரடி அல்லது 2023.43 ச.மீ அல்லது 0 ஏக்கர் 50 செண்ட். |
| மொத்த மனைகள் | : 15. |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 05. |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : 9 - 13. |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : 10. |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : 1-7,7A,14,15. |
| விற்கப்படாத மொத்த பரப்பளவு | : 10407 சதுரடி (or) 966.83 ச.மீ. |

----2

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : ---------------------------------------

**பூங்கா (மனை எண்கள்: 6,15.)** : 1158.50 சதுரடி (or) 107.63 ச.மீ - 11.13%

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1) **பரிசீலனைக் கட்டணம்**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/-வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | 10 மனைகளுக்கு ரூ.5000/- இணையதளம் மூலம் கட்டப்பட்டு பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள மனைகளுக்கு பெறப்பட வேண்டும். விற்கப்பட்ட மனைகளுக்கு தனிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்படலாம். |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) **வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்**

| மனை எண்கள் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைபடுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு --- ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக்கட்டணம் (ஒரு சதுரமீட்டருக்கு --- ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1-5,7,7A,9-14. | ------ | மனைகளின் அளவில் ஒரு சதுர மீட்டருக்கு 33 ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். (ஒவ்வொரு மனைக்கும்) | ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். (ஒவ்வொரு மனைக்கும்) |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) **வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு**

| | |
|---|---|
| 0217. Urban Development – 60 Other Urban Development Scheme – 800. Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots – DTCP 27 Non Taxation Fees- 30 Regularisation. (DPC 0217 60 800 AT 2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) **வளர்ச்சிக்கட்டணம் கீழ்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண்- தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், அடியனூத்து ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்,

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட்ட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

(41)

பார்வை(1) மற்றும் (2)-ல் சுட்டிய அரசாணைகளின்படி, மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1) அரசாணை (நிலை) எண்-172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்-13.10.2017-ல் விதி எண்.7(g)(ii)-ன்படி, மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர்,
திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம்,
திண்டுக்கல்.

**இணைப்பு :**
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.
(ஒரு வரைபடம் மனுதாரருக்கு உள்ளாட்சி மூலமாக)

**பெறுநர் :**
தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
அடியனூத்து ஊராட்சி, திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல்.

**நகல்: (வரைபடத்துடன்)**

| | |
|---|---|
| 1) உதவி இயக்குநர்,<br>நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திண்டுக்கல்-624 004. | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு. |
| 2) சார்பதிவாளர், நாகல்நாயக்கன்பட்டி,<br>மாவட்ட பதிவு ஒருங்கிணைந்த அலுவலகம்,<br>திண்டுக்கல். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு. |

3) தொழில் நுட்ப வைப்பறை - 1வரைபடம்
4) **மனுதாரர் (உத்திரவு மட்டும்)**
திருமதிR.S.செல்வி
எண்-26A, நாகல் புதூர் 5-வது தெரு,
நாகல் நகர், நத்தம் ரோடு,
திண்டுக்கல் - 624 003.

# அடியனூத்து ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. P. மலரவன், B.Sc.,

ந.க.எண். 1214 / 2019/ஊ2 நாள் : 01–08–2019

பொருள் : மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் – அடியனூத்து ஊராட்சி சர்வே எண்.863/4Aல் உள்ள மனை எண்.1,2,3,4,5,7,7A,14 வரன்முறைப்படுத்தி உத்தரவிடுதல் – சார்பாக.

பார்வை :
1) அரசு ஆணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள். 04.05.2017
2) திருமதி. R.S. செல்வி, 26ஏ, நாகல்புதூர் 5வது தெரு, நாகல்நகர், நத்தம் ரோடு, திண்டுக்கல் என்பவரின் மனு, நாள். 22.07.2019
3) திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் / செயலர் அவர்களின் ந.க.எண். 4816/2018/டிஎல்பிஏ, நாள். 25.03.2019
4) இவ்வலுவலக கடித எண். 1214/2019/ஊ2, நாள். 22–04–2019
5) அரசு கட்டண செலுத்துச்சீட்டு நகல்கள்.

<u>உத்தரவு</u>

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், அடியனூத்து ஊராட்சி கிராம சர்வே எண்.863/4A-ல் விற்பனை செய்தது போக மீதமுள்ள மனை எண்.1,2,3,4,5,7,7A,14 பார்வை 1ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள சட்டவிதிமுறைகளை பின்பற்றி பார்வை 2ல் கண்ட மனுதாரர் மனு செய்தார். இவற்றை கவனமுடன் பரிசீலித்த திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர்/செயலர் பார்வை – 3ல் கண்டபடி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து அரசு தலைப்பில் மனுதாரர் செலுத்த வேண்டிய கட்டண விபரங்களை குறிப்பிட்டு பார்வை 4ல் காணும் கடிதம் வாயிலாக அறிவிப்பு செய்யப்பட்டது. மனுதாரர் மேற்படி அறிவிப்பை தொடர்ந்து பார்வை 5ல் காணும் விபரப்படி உரிய கட்டணங்களை அரசு தலைப்பின் கீழ் செலுத்தியுள்ளார். எனவே கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனை எண்கள் 1, 2, 3, 4, 5, 7, 7A, 14 ஆகியவற்றை மனை வரன்முறைப்படுத்தி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

## <u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி UD 4(3) த்துறை நாள்.04.05.2017ல் கண்டுள்ள வழிகாட்டுதல்களை அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் அதில் கண்டுள்ள மனை 2 வரன்முறைக்கு உட்படுத்தப்படுகிறது.

2. மனைப்பிரிவில் உள்ள விற்கப்பட்ட மனைகள் வரன்முறைப்படுத்தப்படும் பொழுது அம்மனைகளின் அளவுகளுக்கு பத்திரப்பதிவில் அமைந்துள்ளபடியே கருத்திற்கொண்டு உரிய கட்டணங்கள் பெற்று வரன்முறைப்படுத்தப்படல் வேண்டும் என்ற விதிமுறைக்கேற்ப உரிய கட்டணம் பெறப்பட்டுள்ளது.

3. இந்த அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு கொள்கை அளவில் (In Principle approval layout frame work) ஒப்புதல் மட்டும் அளிக்கப்படுகிறது. (அரசாணை 78, பிரிவு 5(4)).

43

4. இந்த அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு பதிவுத்துறையில் பதியப்பட்டுள்ள வில்லங்கச்சான்று (Encumbrance Certificate)–Onlineல் கண்டறியப்பட்டு விற்கப்பட்ட மனைகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத 1,2,3,4,5,7,7A,14 மனைகளுக்கு இந்த உத்தரவு பொருந்தும்.

5. அனுமதியற்ற மனைப்பிரிவு இடத்திற்கு நீதிமன்ற ஆட்சேபனை மற்றும் சட்டப்பூர்வமான புகார் மற்றும் வில்லங்கங்கள் தெரியப்படுத்தப்படின் ஊராட்சி செயல் அலுவலர் மற்றும் உறுப்பினர் செயலரால் ஆய்வுக்குட்பட்டு இந்த ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

6. கட்டணம் செலுத்தப்படாத மனைகள் மற்றும் OSR இடங்களை உரிய காலங்களில் வரன்முறை செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

7. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட இடங்களை வரன்முறை செய்வது குறித்து அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

8. இந்த 1,2,3,4,5,7,7A,14 மனைகளுக்கான அங்கீகாரம் ஊராட்சி மன்ற தீர்மான ஒப்புதலின்படி மேற்கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம்
திண்டுக்கல் ஒன்றியம்
01/08/19

இணைப்பு

அங்கீகரிக்கப்பட்ட வரைபட பிரதிகள்

பெறுநர்

திருமதி. R.S. செல்வி,
26A, நாகல்புதூர் 5வது தெரு,
நாகல்நகர்,
நத்தம் ரோடு,
திண்டுக்கல்